வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்

---

### இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் பிரிவுகள் 4 மற்றும் 9(2)இன் நியதிகளில் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்து சந்தைப்படுத்துகின்ற நோக்கத்திற்காக, குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் பின்வரும் விதத்தில் அனுமதி வழங்கப்படுகிறது.

2.1 இலங்கை அபிவிருத்தி முறிகளை கையேற்றல், உடமையில் வைத்திருத்தல் மற்றும் மாற்றல் செய்யும் நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஐ.அ.டொலர்களில் பின்வரும் இரண்டு விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுவதற்கு.

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை நேரடியாக கொள்வனவு செய்கின்ற, கீழே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர் வகையிலிருந்து பெறப்பட்ட, இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிதியத்தினை வரவு வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் “இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டுக் கணக்கு” என்ற பெயரில் ஐ.அ.டொலரில் வட்டி உழைக்கும் கணக்கினைப் பேணுவதற்கு.

(ஆ) கீழேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர் வகையுடன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளை வகைப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக வட்டி உழைக்கும் அடிப்படையில் பேணக்கூடிய “முறி முதலீட்டிற்கான டொலர் கணக்கு” என்ற பெயரில் ஐ.அ.டொலர் கணக்கு. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களைப் பொறுத்தவரையில் இக்கணக்கினைப் பேணுவது கட்டாயமல்ல.

2.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து ஐ.அ.டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு முதனிலை வணிகர்களாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட முகவர்கள், அத்தகைய கொள்வனவுகள் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடமையாளர்களிடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருக்குமிடத்து, கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் தொகை இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவிற்கு தேவையற்றதாக இருக்குமிடத்து முதனிலை வணிகர்கள் அவ்வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு உடனடியாக விற்றுவிடல் வேண்டும்.

### 3. இலங்கை அபிவிருத்தி முறிகளின் தகைமையுடைய முதலீட்டாளர்களின் வகைகள்

(அ) 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின்கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள்.

(ஆ) இலங்கையில் வதிகின்ற அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற வெளிநாட்டு அரசுகளின் பிரசைகள்

(இ) இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவிட விசாவைப் பெற்றுள்ள இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கைப் பிரசைகள்

(ஈ) தொழிலொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக அல்லது வியாபாரமொன்றினை ஏற்படுத்துவதற்காக அல்லது தொழில்சார் நிபுணத்துவத்தில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள இலங்கைப் பிரசைகள்.

(உ) இலங்கை தவிர்ந்த வேறொரு நாட்டின் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத நிறுவனங்கள்.

(ஊ) ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை வரவு வைக்கும் நோக்கத்திற்காக மாத்திரம் பேணப்படுகின்ற அத்தகைய கம்பனிகளின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு பற்று வைப்பதன் மூலம் இலங்கை அபிவிருத்தி முறிகளின் அனைத்து கொள்வனவுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்தான முழுமையான விலக்கல்களுடன் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் நியதிகளில் உடன்படிக்கையினைச் செய்து கொண்டுள்ள கம்பனிகள்.

(எ) நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட ஒப்புதலின் நியதிகளில், அத்தகைய காப்புறுதிக் கம்பனிகளினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் பேணப்படும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் செய்யப்படும் பற்றுக்களுக்கெதிராகவே இலங்கை அபிவிருத்தி முறிகளின் அனைத்துக் கொள்வனவுகளும் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள்.

(ஏ) தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்கள்.

(ஐ) வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்.

(ஒ) சட்டத்தின் 4(1)(அ) மற்றும் 4(1)(ஆ) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்.

(ஓ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனியாட்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள்.

## 4. இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு

### 4.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து ஐ.அ.டொலரில் பெறப்பட்ட நிதியங்கள்.

### 4.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களினால் இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு செய்யப்படவேண்டிய

கொடுப்பனவு தொடர்பில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்ட முன்வைக்கப்பட்ட ஆவணங்களில் அல்லது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, செய்யப்படும் நிதிய மாற்றல்.

(ஆ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் மீது வேறு ஏதேனும் நோக்கத்திற்கான மீளளிப்பு மற்றும் கொடுப்பனவுகளின் பொருட்டு மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கான நிதிய மாற்றல்.

**5. முறி முதலீடுகளுக்கான டொலர் கணக்கு**

**5.1 அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட ஐ.அ.டொலர்.

(ஆ) இலங்கை அபிவிருத்தி முறிகளின் விற்பனை தொடர்பில் மேலேயுள்ள பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட நிதியம்.

(இ) கணக்குடமையாளரினால் வைத்திருக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான முதல் மற்றும் வட்டியின் மீளக்கொடுப்பனவாகப் பெறப்பட்ட தொகைகள்.

**5.2 அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளை கையேற்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் கொடுப்பனவாக பொதுப்படுகடன் கண்காணிப்பாளரால் முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்கச் செய்யப்படும் நிதிய மாற்றல்.

(ஆ) இரண்டாந்தரச் சந்தையில் கணக்குடமையாளரினால் இலங்கை அபிவிருத்தி முறிகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த அபிவிருத்தி முறி விற்பனையாளருக்கான கொடுப்பனவுகள்.

(இ) துணைப் பிரிவுகள் மற்றும் முறிகளின் திரட்சிக்கான கட்டணம் போன்றவற்றிற்காக பொதுப்படுடன் கண்காணிப்பாளருக்கு கொடுப்பனவு செய்யவேண்டிய ஏதேனும் தொகை தொடர்பாகப் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்டு முன்வைக்கப்பட்ட ஆவணம் அல்லது சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கிணங்க செய்யப்படும் நிதிய மாற்றல்கள்.

(ஈ) இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான அளவினைவிட கணக்குடமையாளர் கணக்கில் மிகையானதாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்றல்.

பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

2017 நவெம்பர் 20